2025

# கிறிஸ்தவ கல்விச்சான்றிதழ்

# சிறுவர் ஊழிய களம்









கொழும்பு இறையியல் கல்லூரி

*தேசங்களின் மறுரூபமாகுதலுக்காக திருச்சபைக்கான வளங்கள்*

## ஒழுங்கமைப்பு

| | புள்ளிகள் |
|---|---|
| கட்டாய பாடங்கள் | |
| வேதாகமம் மற்றும் இறையியல் பாடங்கள் | 08 |
| சிறுவர் ஊழிய பாடங்கள் | 08 |
| விருப்புப்பாடங்கள் | 20 |
| மொத்தம் | 36 |

## கட்டாயம்: வேதாகமம் மற்றும் இறையியல் பாடங்கள்

சிறுவர்கள் குறித்த வேதாகம கண்ணோட்டம்
இறையியலுக்கான அறிமுகம்
புதிய ஏற்பாட்டிற்கான அறிமுகம்
கிறிஸ்தவ உலகநோக்கை மேம்படுத்தல்

## கட்டாயம்: சிறுவர் ஊழிய பாடங்கள்

பரிபூரணமான சிறுவர் அபிவிருத்தி
சிறுவர்களுக்கு வேதாகமத்தை கற்பித்தல்
சிறுவர், திருச்சபை மற்றும் திருத்தூதுப்பணி
சிறுவர் பணியில் அறநெறிகள்

## விருப்புப்பாடங்கள்

துஷ்பிரயோகத்திற்குள்ளான சிறுவர்களுக்கான பணி
வாலிபர் ஊழியம்
கிறிஸ்தவ பிள்ளை வளர்ப்பு
சிறுவர்களுக்கான சீஷத்துவம்
ஆபத்திலிருக்கும் சிறுவர்கள் மீதான திருச்சபையின் பங்கு
கலாச்சாரத்தினை புரிந்து கொள்ளல்
சிறுவர் ஆற்றுப்பணி
பராமரிப்பாளரின் ஆவிக்குரிய உருவாக்கம் மற்றும் மன அழுத்தத்திற்கான முகாமைத்துவம்
கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் தொடர்பாடல்
உங்களுக்குள் இருக்கும் தலைமைத்துவத்தை வளர்த்தெடுத்தல்

பாடநெறி விபரங்களை அறிந்து கொள்வதற்கு கிறிஸ்தவ கல்விச்சான்றிதழ்: சிறுவர் ஊழிய களம் பாடநெறி வழிகாட்டியினை பார்க்கவும்.

## பாடநெறிகள்

- வாரத்திற்கு இரண்டு தடவை 3 மணிநேர அமர்வுகள் நடைபெறும்.
  ஒவ்வொரு திங்கட்கிழமையும் காலை 9.30 முதல் நண்பகல் 12.30 வரை
  ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நண்பகல் 1.00 முதல் மாலை 4.00 வரை

- ஒவ்வொரு பாடமும் 2 புள்ளிகளை உள்ளடக்கியுள்ளது.

- மாணவர்களால் இரண்டு ஆண்டுகளில் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் இந்த பாடநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது.

## பாடங்கள் கற்றுக்கொடுக்கப்படும் முறைகள்

- **இயங்கலை:** Zoom வழியாக பாடங்கள் நடைபெறும். இங்கு பாடக்குறிப்புக்களை Moodle வழியாக பெற்றுக்கொள்ளலாம். இதற்கு செயற்திறனுடைய இணையத்தள வசதியும் டிஜிட்டல் சாதனமொன்றும் உங்களுக்கு அவசியமாகிறது.

## செயலமர்வு

பாடவிடயம் தொடர்பாக பாடநெறிக்கு மேலதிகமாக இணையத்தின் ஊடாக சமகாலத்துடன் தொடர்புறும் தலைப்புகளில் அறிவூட்டல் செயலமர்வு நடைபெறும்

## பாட பயிற்சி நெறி கட்டணம்

பாடநெறி கட்டணம் தொடர்பான மேலதிக தகவல்களுக்கு தயவு செய்து சிறுவர் ஊழிய களம் ஒருங்கிணைப்பாளரை தொடர்பு கொள்ளவும்.

## பாடநெறிகளுக்கு பதிவு செய்யும் படிமுறைகள்

குறைந்த பட்ச தகமைகள்: க.பொ.த. சாதாரண தரம் அல்லது சிறுவர் ஊழிய அனுபவம் பரிசீலிக்கப்படும்

**ஆவணங்கள்**

- சபை போதகரால் பூர்த்தி செய்யப்பட்ட சிபாரிசு படிவம்
- பரிந்துரை கடிதம்
- 3 புகைப்படங்கள்
- க.பொ.த சாதாரண தர சான்றிதழ்

**படி 1**

**பாடநெறி விண்ணப்பங்கள்:** பாடநெறிக்கான விண்ணப்பங்களை உங்கள் ஒருங்கிணைப்பாளரிடம் பெற்றுக்கொள்ளுங்கள். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உரிய ஆவணங்களுடன் ஒருங்கிணைப்பாளரிடம் சமர்ப்பியுங்கள்.

**படி 2**

**பாடநெறி அனுமதி:** சிறுவர் ஊழிய களத்தின் கிறிஸ்தவ கல்விச்சான்றிதழ் பாடநெறிக்கான உங்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதென எழுத்து மூலமாக அறிவிக்கப்படும்.

## விரிவுரையாளர் விபரங்கள்



**வனஜா ராஜ்குமார்,** BTh
கொழும்பு இறையியல் கல்லூரியின் உதவி நூலகவியலாளராகவும், வடகொழும்பு கல்வி நிலையத்தின் ஒருங்கிணைப்பாளராகவும் பணியாற்றி வருகிறார். பெண்கள் மற்றும் சிறுவர் ஊழியங்களில் ஈடுபட்டு வருவதுடன், இலங்கை வேதாகம சங்கத்தின் 'Master Facilitator in Healing the Wounds of Trauma Children' பயிற்சியை பெற்றவரும், "தாயின் வடிவமைப்பு" என்பதின் சிரேஷ்ட வளவாளருமாவார்.



**வி. கிறிஷாந்தி சந்திரசேகர்,** Dip (Counselling), BTh
கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியும், சமூக அபிவிருத்தி தேசிய நிறுவனத்தின் (National Institute of Social Development) ஆற்றுப்பணியில் பட்டச்சான்றிதழை பெற்றவருமாவார். இவர், தெமட்டகொட, கிரேஸ் வேதாகம நிறுவனத்தின் வேதாகம கல்வி ஆசிரியராக பணியாற்றி உள்ளதுடன், குடும்பங்கள் மத்தியிலே ஆற்றுப்பணியில் ஈடுபட்டு வருகிறார்.




**ஜூலியன் தேவதாசன்,** BTh, MDiv, MTh (candidate)
கொழும்பு இறையியல் கல்லூரியின் உதவி கல்விப்பீடாதிபதி. தற்போது தென்னாபிரிக்க இறையியல் கல்லூரியில் (தென்னாபிரிக்கா) இறையியலில் முதுகலைமாணியை மேற்கொண்டு வருகிறார். இவர், கிறிஸ்துவின் ஸ்தானாதிபதிகள் (AMBASSADORS FOR CHRIST INTERNATIONAL) என்ற சர்வதேச அமைப்பின் ஊழிய உறுப்பினராகவும், கருக்கலைப்பிலிருந்து மீண்டு உயிர்வாழ்பவர்களின் வலையமைப்பின் (Abortion Survivors Network) சர்வதேச கருக்காப்பிற்கான (Pro-Life) பேச்சாளராகவும் திகழ்கின்றார்.



**ஜெயசீலன் ஜோயல் டிரோன்,** BTh
கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரி. அநேக வருடங்களாக கொழும்பு சுவிசேஷ கூடார சபையின் வாலிபர் ஐக்கியத்தின் தலைவராகவும் போதகர் குழுவின் அங்கத்தவராகவும் பணி புரிந்துள்ளார். தற்போது திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கிறிஸ்துவின் ஜெபவீடு திருச்சபையின் உதவி போதகராகவும், ஆசிரியராகவும் பணியாற்றுகிறார்.



**நிரஞ்ஜனி இராஜரட்ணம்,** HND (Counselling), BTh, MSc (candidate)
கொழும்பு இறையியல் கல்லூரியின் இளமாணி பட்டதாரியும். சிறுவர் உரிமை செயற்பாட்டாளராக இருப்பதுடன், திருச்சபைகள் மற்றும் கிறிஸ்தவ நிறுவனங்களுடன் இணைந்து ஆலோசகராக பணிபுரிந்து வருகின்றார்.



**காமினி ஜயந்த,** BTh, MSW (candidate)
கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியும். தற்போது இலங்கை, Infinity Centre for Higher Studies-ன் முழு இலங்கைக்குமான நிர்வாக ஒருங்கிணைப்பாளராக கடமையாற்றி வருகிறார். இலங்கையில் பல பாகங்களுக்கும் சென்று வேதாகம பாடங்களையும், பிரசங்கங்களையும் மேற்கொள்வதுடன், போதைப்பொருட்களுக்கு அடிமையாகி உள்ளவர்களை புனரமைக்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளார்.



**நிவேதித்தா ஜீவபாலன்,** BA (Psy)
ஆலோசனைப்பணியில் 25 ஆண்டுகளுக்கும் மேலாக சிறந்த அனுபவமுள்ள விசேட மனநல நிபுணர் ஆவார். சிறுவர் மற்றும் வயது வந்தோருக்கு ஆலோசனை வழங்குவதில் சிறந்து விளங்குகிறார். ஆலோசகர்களை பயிற்றுவித்து அவர்களை மேற்பார்வை செய்துள்ளதுடன், இலங்கையில் மனநலம் மற்றும் சிறுவர் பாதுகாப்பு முயற்சிகளுக்கு பெருமளவான பங்களிப்பினை வழங்கியுள்ளார்.



**சர்மிளா சுதாகர்,** BTh
கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர், கணக்காளராக பணியாற்றுகிறார். கடந்த இரு தசாப்தங்களாக யுத்தம் மற்றும் பேரழிவுகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்காக கிறிஸ்தவ சர்வதேச உதவி அமைப்புகளுடன் ஒன்றிணைந்து பங்காற்றியுள்ளார்.



**கே. யாபேஸ்,** BTh
கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர் AOG திருச்சபையினை தனது ஆராதிக்கும் சபையாகவும், அதன் போதகராகவும் பணியாற்றுவதுடன், திருச்சபைகளில் கற்பித்தல், பிரசங்கித்தல் தலைமைத்துவ பயிற்சியளித்தல், வேதாகம கல்லூரியில் கற்பித்தல் போன்ற பணிகளிலும் ஈடுபட்டு வருகிறார்.

# கிறிஸ்தவ கல்விச்சான்றிதழ்
# சிறுவர் ஊழிய களம்

"நாம் இன்று சிறுவர்களை புறக்கணிப்போமானால், எமது இந்த மறுமலர்ச்சியானது இந்த தலைமுறைக்கு மட்டுமே வரையறுக்கப்படும்."

(ஜோன் உவெஸ்லி)

தம் மன, உடல், சமூக மற்றும் ஆவிக்குரிய தேவைகள் பற்றி விழிப்புடன் இருந்து, கர்த்தருடனான நல்ல உறவுக்கு கர்த்தருடைய வார்த்தைகளை கற்பதில் வளர்ச்சியடைந்து, ஒரு சிறுவன் அல்லது சிறுமியின் உலக கண்ணோட்டம், விருத்தி மற்றும் அவர்களின் இழப்புகளை புரிந்து கொண்டு அவனுக்கும் அல்லது அவளுக்கும், குடும்பத்துக்கும் பரிசுத்தாவியானவரின் தூண்டுதலின் பராமரிப்பினை வழங்குவதற்கு தேவையான திறன்கள் மற்றும் வளங்களினால் மாணவர்களை மேம்படுத்துதல்.

## சிறுவர் ஊழிய களத்தின் கிறிஸ்தவ கல்விச்சான்றிதழ் மூலம் நீங்கள் வலுவூட்டப்படுகிற முக்கிய பகுதிகள்:

### அறிவு: பின்வருவனவற்றை பற்றிய அறிவூட்டல்

- கிறிஸ்தவ சிறுவர் ஊழியம் தொடர்பாக வேதாகம அடிப்படையிலான இறையியல் மற்றும் அறநெறி அறிவு.
- பரிபூரணமான சிறுவர் அபிவிருத்தி மற்றும் வளர்ச்சிக்கு தேவையான உலக கண்ணோட்டம் தொடர்பான புரிதல்.
- ஒரு பிள்ளையை கிறிஸ்துவின் சீஷத்துவத்திற்கு கொண்டு வருவதற்கு தேவையான கிறிஸ்தவ பொறுப்பும் செயலாற்றுகை குறித்த புரிதலும்.

### தனிப்பட்ட முன்னேற்றம்: பின்வரும் பிரிவுகளில்

- உங்கள் அழைப்புக்கு ஏற்ப ஆவிக்குரிய ஒழுக்கம் மற்றும் உருவாக்கத்தை முன்னேற்றுதல்.
- சிறுவர்களின் தேவைகளுக்காக மனதுருக்கமுள்ள இருதயத்தை உருவாக்கிக்கொள்ளுதல்.
- சிறுவர்களின் சமூக நீதி பிரச்சனைகளுக்கு எதிராக குரல் எழுப்பும் தைரியத்தை பெற்றுக்கொள்ளுதல்.

### நடைமுறை பிரயோகம்: நீங்கள் வலுவூட்டப்படுகிறீர்கள்

- சிறுவர்களுக்கு கர்த்தரின் வார்த்தைகளை கற்பித்து தேவனுடனான உறவிற்கூடாக அவர்களை சீஷத்துவத்திற்கு வழிநடத்துதல்.
- சிறுவர்களுக்கு பிரயோஜனம் மிக்க நட்பின் ஆலோசக வழிகாட்டிகளாக சேவையாற்றுதல்.
- இன்று சிறுவர் அன்றாடம் சந்திக்கும் பல்வேறு பிரச்சனைகளில் இருந்து காப்பாற்றுவதற்குரிய அவர்களின் தேவைகளுக்கான சரியான படிமுறைகளை பரிந்துரைத்தல்.

# கொழும்பு இறையியல் கல்லூரி

*தேசங்களின் மறுரூபமாகுதலுக்காக திருச்சபைக்கான வளங்கள்*

வேத வார்த்தைகளில் வேரூன்றப்பட்டது
ஊழியத்திற்கான ஆற்றல்
சபைக்கான அர்ப்பணம்

## கிறிஸ்தவ கல்விச்சான்றிதழ்
## சிறுவர் ஊழிய களம்
## விசேட அம்சங்கள்

தேவைப்படும் புள்ளிகள் 36.

அனைத்து பாடநெறிகளும் இணையத்தின் ஊடாக நடைபெறும்.

பாடத்துடன் தொடர்புபட்ட செயலமர்வுகள் 4.

பாடநெறியானது 2 ஆண்டுகளில் பூர்த்தியாகும்.

முன் இறையியல் பயிற்சி அவசியமில்லை.

**விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித்தினம்**
**2025 சித்திரை 21**

**பாடநெறி ஆரம்ப தினம்**
**2025 வைகாசி 5**

மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்க:
ஒருங்கிணைப்பாளர்: சிறுவர் ஊழிய களம்

189, துட்டுகெமுனு வீதி, கொஹுவலை
011 2890809 | 076 4283127 | cm@cts.lk | www.cts.lk